

ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலக வளாகத்தில் பயனாளிகளுக்கு இணைப்பு சக்கரம் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர்களை வீட்டுவசதி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் சு.முத்துசாமி வழங்கினார். நிகழ்வில் மாவட்ட ஆட்சித் தலைவர் ச.கந்தசாமி, ஈரோடு கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் வி.சி.சந்திரகுமார், துணை மேயர் வி.செல்வராஜ், மாவட்ட மாற்றுத்திறனாளிகளின் நல அலுவலர் பூபதி உள்ளிட்ட பலர் உள்ளனர்.



பெரம்பலூர் மாவட்டத்தில், மாவட்ட கழக பொறுப்பாளர் வீ.ஜெகதீசன் வரவேற்பில், கழக துணைப் பொதுச்செயலாளர் மேனாள் ஒன்றிய அமைச்சர் ஆ.இராசா.எம்.பி. முன்னிலையில், ஓ.பி.எஸ்.அணியைச் சேர்ந்த அ.தி.மு.க.வினர், வேப்பந்தட்டை கிழக்கு ஒன்றிய செயலாளர் முத்தமிழ்செல்வன், முன்னாள் மாவட்ட பிரதிநிதி சாத்தனவாடி துரை ஆகியோர் ஏற்பாட்டில் ஜெ.பேரவை ஆர்.பெரியசாமி, ரவிக்குமார் மற்றும் சாத்தனவாடி,மேட்டுப்பாளையம், எறையூர் சர்க்கரை ஆலை ஆகிய கிராமங்களில் இருந்து 200 பேர் தங்களை தி.மு.க.வில் இணைத்துக்கொண்டனர்.இந்த நிகழ்ச்சியில் எம்.பிரபாகரன், தங்க.சித்தார்த்தன், மு.அட்சயகோபால், வழக்கறிஞர் என்.ராஜேந்திரன், தமுதாழை பாஸ்கர், எம்.இராஜ்குமார், செ.நல்லதம்பி,தி.மதியழகன் ஒன்றிய கழக பொறுப்பாளர்கள் சி.ராஜேந்திரன், ந.ஜெகதீஷ்வரன், அழகு. நீலமேகம், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் து.ஹரிபாஸ்கர், துணை அமைப்பாளர் டி.ஆர்.சிவசங்கர், மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் மகாதேவி ஜெயபால், மாவட்ட அமைப்புசாரா ஓட்டுநர் அணி அமைப்பாளர் எம்.மணிவாசகம் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

# சுவாமிமலை முருகன் கோவிலில் புதிதாக 2 மின் தூக்கிகள்!

## அமைச்சர் பி.கே.சேகர்பாபு பொதுமக்களின் பயன்பாட்டிற்கு துவக்கி வைத்தார்!

தஞ்சாவூர், மார்ச் 11-

தஞ்சாவூர் மாவட்டம், சுவாமிமலையில் அமைந்துள்ளது முருகப்பெருமானின் அறுபடை வீடுகளில் நான்காம் படைவீடான சுவாமிநாத சுவாமி கோயிலில் புதிய மின் தூக்கி மற்றும் புதிய காத்திருப்பு கூடங்களை அமைச்சர் பி. கே.சோகர்பாபு மக்கள் பயன்பாட்டிற்காக திறந்த வைத்தார்.

கும்பகோணம் அருகே, பாபநாசம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட, சுவாமிமலையில் உள்ள முருகப் பெருமானின் அறுபடை வீடுகளில் நான்காம் படைவீடான சுவாமிநாத சுவாமி கோயிலில் முதியவர்கள், மாற்றுத்திறனாளிகள், நோயாளிகள் மற்றும் பக்தர்கள் கோவிலின் மேற்பகுதிக்கு சிரமம் இன்றி செல்லும் வசதிக்காக மின் தூக்கி (லிஃப்ட்) வசதி ஏற்படுத்த வேண்டும் என பாபநாசம் எம்எல்ஏ ஜவாஹிருல்லா கடந்த 2022ம் ஆண்டு ஏப்ரல் 12ம் தேதி சட்டப்பேரவையில் கோரிக்கை விடுத்தார். இதையடுத்து தமிழ்நாடு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் சேகர்பாபு பரிந்துரையின்பேரில், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் சுவாமிமலை சுவாமிநாத சுவாமி திருக்கோவிலில் முதியோர்களும், மாற்றுத்திறனாளிகளும் சென்று முருகப்பெருமானை தரிசனம் செய்ய வசதியாக லிஃப்ட் வசதி ஏற்படுத்த நடவடிக்கை மேற்கொண்டார்.

தொடர்ந்து கடந்த2024ம் அரசாணை பிறப்பிக்கப்பட்டு பிப்ரவரி 17ம் தேதி சுவாமிமலை கோயிலில் ஈசானிய மூலையில் ரூ.3.55 கோடி மதிப்பில், ஒரே நேரத்தில் 884 கிலோ எடை தாங்கும், 13 பேர் வரை செல்லும் வகையில் நவீன வசதிகளுடன் தலா 2 மின் தூக்கிகளை அமைக்க அடிக்கல் நாட்டப்பட்டது.

இந்நிலையில் கடந்த இரண்டு ஆண்டுகளாக பணிகள் நடைபெற்று தற்போது நிறைவு பெற்றதை தொடர்ந்து இன்று மார்ச் 9ம் தேதி திறப்பு விழா நடைபெற்றது.

விழாவில் தமிழ்நாடு உயர்கல்வித்துறை அமைச்சர் முனைவர் கோவி.செழியன், தஞ்சாவூர் வடக்கு மாவட்டக் கழக பொறுப்பாளர் சாக்கோட்டை அன்பழகன் எம்.எல்.ஏ மற்றும் பாபநாசம் எம்எல்ஏ ஜவாஹிருல்லா ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

சுவாமிமலை பேரூராட்சி தலைவர் வைஜெயந்தி சிவக்குமார் வரவேற்றார். சிறப்பு அழைப்பாளராக தமிழ்நாடு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு பங்கேற்று 2 மின் தூக்கியை திறந்த வைத்து, கூடுதலாக 869 சதுர அடியில் 50 நபர்கள் அமரக்கூடிய பக்தர்கள் காத்திருப்பு அறையும், ஆண்கள் மற்றும் பெண்களுக்கு என சுகாதார மான முறையில் தலா இரண்டு கழிப்பறைகளும் அமைக்கப்பட்டுள்ள பகுதியையும் ஆய்வு செய்தார்.

இந்நிகழ்ச்சியில் கும்பகோணம் மாநகர திமுக செயலாளர் சு.ப.தமிழழகன், அரசு வழக்கறிஞர் பா.விஜயகுமார், சுவாமிமலை பேரூர் திமுக செயலாளர் பாலசுப்பிரமணியன், துணை செயலாளர் கோபால், இந்து சமய அறநிலையத்துறை மயிலாடுதுறை இணை ஆணையர் சிவக்குமார், கும்பகோணம் துணை ஆணையர் உமா தேவி, தக்கார் சுவாமிநாதன் மற்றும் கட்சி நிர்வாகிகள், பேரூராட்சி மன்ற உறுப்பினர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

### நாமக்கல் மேற்கு மாவட்டத்தில்

# அ.தி.மு.க.- பா.ஜ.க.வினர் 100 க்கும் மேற்பட்டோர் கழகத்தில் இணைந்தனர்!

## மாவட்டப் பொறுப்பாளர் கே.எஸ்.மூர்த்தி முன்னிலையில்!

நாமக்கல், மார்ச் 11-

நாமக்கல் மேற்கு மாவட்டம் திருச்செங்கோடு ஒன்றியம் தோக்கவாடி ஊராட்சியை சேர்ந்த திருச்செங்கோடு தெற்கு ஒன்றிய பா.ஜ.க. பொதுச்செயலாளர் ஆர்.லோகநாதன் தலைமையில் 50 க்கும் மேற்பட்ட பா.ஜ.க.வினர் தங்களை திராவிட முன்னேற்றக் கழகத்தில் நாமக்கல் மேற்கு மாவட்ட தி.மு.க. பொறுப்பாளரும், முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான கே.எஸ்.மூர்த்தி முன்னிலையில் தங்களை திமுகவில் இணைத்துக் கொண்டனர்.

இநநிகழ்வில் மாநில மாணவரணி துணைச் செயலாளர் சுரேஷ் ஒன்றிய பொறுப்பாளர்கள், வட்டூர் தங்கவேல், தாமரைச்செல்வன், அருண்குமார் உள்ளிட்டோர் கலந்து கொண்டு புதிதாக இணைந்தவர்களை வரவேற்றனர்.

இதேபோல் பரமத்தி வேலூரில் அ.தி.மு.க.வைச் சேர்ந்த 50 க்கும் மேற்பட்ட இளைஞர்கள் தி.மு.க.வில் இணைந்தனர்.

தி.மு.க. தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் தலைமையை ஏற்று, நாமக்கல் மேற்கு மாவட்ட திமுக பொறுப்பாளர் கே.எஸ்.மூர்த்தி முன்னிலையில் பரமத்தி வேலூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட வேலூர்பேரூரை சேர்ந்த ஏழுமலை (மைலேஷ்) தலைமையில் 50 க்கும் மேற்பட்ட இளைஞர்கள் அ.தி.மு.க.விலிருந்து விலகி திராவிட முன்னேற்றக் கழகத்தில் தங்களை இணைத்துக் கொண்டனர்.

இந் நிகழ்ச்சியில் வேலூர் பேரூர் கழக செயலாளர் முருகன், மாவட்ட பொறியாளர் அணி தலைவர் அருண், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் பூக்கடை சுந்தர், தகவல் தொழில்நுட்ப அணி தொகுதி ஒருங்கிணைப்பாளர் பாண்டவர் லோகேஸ்வரன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் மற்றும் உடன்பிறப்புகள் கலந்து கொண்டனர்.

### பெரம்பலூர் மாவட்டத்தில் அ.தி.மு.க.வைச் சேர்ந்த

# 200 பேர் ஆ.இராசா.எம்.பி. முன்னிலையில் தி.மு.க.வில் இணைந்தனர்!

## மாவட்டக் கழகப் பொறுப்பாளர் வீ.ஜெகதீசன் - எம்.பிரபாகரன்.எம்.எல்.ஏ. பங்கேற்பு!

பெரம்பலூர், மார்ச் 11-

பெரம்பலூர் மாவட்டத்தில், மாவட்ட கழக பொறுப்பாளர் வீ.ஜெகதீசன் வரவேற்பில் , கழக துணைப் பொதுச் செயலாளர் மேனாள் ஒன்றிய அமைச்சர் ஆ.இராசா. எம்.பி. முன்னிலையில், ஓ.பி.எஸ்.அணியைச் சேர்ந்த அ.தி.மு.க.வினர், வேப்பந்தட்டை கிழக்கு ஒன்றிய செயலாளர் முத்தமிழ் செல்வன், முன்னாள் மாவட்ட பிரதிநிதி சாத்தனவாடி துரை ஆகியோர் ஏற்பாட்டில் ஜெ.பேரவை அரும்பாவூர் முன்னாள் நகரச் செயலாளர் ஆர்.பெரியசாமி, பா.ம.க. அரும்பாவூர் முன்னாள் நகரச் செயலாளர் ரவிக்குமார் மற்றும் சாத்தனவாடி,

மேட்டுப்பாளையம், எறையூர் சர்க்கரை ஆலை ஆகிய கிராமங்களில் இருந்து 200 பேர் தங்களை தி.மு.க.வில் இன்று இணைத்துக்கொண்டனர்.

இந்த நிகழ்ச்சியில் சட்டமன்ற உறுப்பினர் எம்.பிரபாகரன், தொகுதி பார்வையாளர் தங்க.சித்தார்த்தன், தலைமை செயற்குழு உறுப்பினர்கள் மு.அட்சய கோபால், வழக்கறிஞர் என். ராஜேந்திரன், மாவட்ட துணைச் செயலாளர் தமுதாழை பாஸ்கர், ஒன்றிய கழகச் செயலாளர்கள் எம். இராஜ்குமார், செ.நல்லதம்பி,தி.மதியழகன் ஒன்றிய கழக பொறுப்பாளர்கள் சி.ராஜேந்திரன், ந.ஜெகதீஷ்வரன், அழகு.நீலமேகம், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் து.ஹரி பாஸ்கர், துணை அமைப்பாளர் டி.ஆர்.சிவசங்கர், மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் மகாதேவி ஜெயபால், மாவட்ட அமைப்புசாரா ஓட்டுநர் அணி அமைப்பாளர் எம்.மணிவாசகம் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.




நீலகிரி மாவட்டம் உதகை பழங்குடியினர் பண்பாட்டு மையத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், அரசு தலைமை கொறடா கா.ராமச்சந்திரன், மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி லட்சுமி பவ்யா தண்ணீரு அவர்களின் முன்னிலையில், தமிழ்நாடு ஊரக நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் சார்பில் 171 பயனாளிகளுக்கு ரூ.20.94 கோடி மதிப்பில் வங்கி கடன் இணைப்புகளையும், மாற்றுத்திறனாளிகள் நலத்துறை சார்பில் 3 பயனாளிகளுக்கு ரூ.4.85 இலட்சம் மதிப்பில் தாலிக்கு தங்கம் மற்றும் நிதியுதவி என மொத்தம் 174 பயனாளிகளுக்கு ரூ.20.98 கோடி மதிப்பீட்டில் பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். உடன் உதகை சட்டமன்ற உறுப்பினர் ஆர்.கணேஷ், அபிலாஷா கௌர், நாராயணன் உட்பட பலர் உள்ளனர்.

### தஞ்சாவூர் மாவட்டத்தில் மாற்றுத்திறனாளிகள் நலத்துறை சார்பில்

# 315 மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ. 1 கோடியில் நலத்திட்ட உதவிகள்!

## மாவட்டச் செயலாளர் துரை.சந்திரசேகரன் எம்.எல்.ஏ. வழங்கினார்!

தஞ்சாவூர், மார்ச் 11-

தஞ்சாவூர் மாவட்டத்தில் 315 மாற்றுதிறனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா அன்னை சத்யா விளையாட்டரங்கில் நடைபெற்றது.

இவ்விழாவில் தஞ்சை மாநகர மேயர் சண்.இராமநாதன், துணை மேயர் மரு. அஞ்சுகம் பூபதி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

மாற்றுதிறனாளிகளுக்கு தஞ்சை மத்திய மாவட்டச் செயலாளர் துரை.சந்திரசேகரன் எம்.எல்.ஏ, மாவட்ட ஆட்சியர் பிரியங்கா பங்கஜம் ஆகியோர் பங்கேற்று மாற்றுத்திறனாளிகள் நலத்துறை சார்பில் 175 மாற்றுத்திறனாளிகளுக்கு ரூபாய் 1 கோடியே 10 இலட்சம் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளையும், ரூ.2,75,000 மதிப்பிலான திருமண உதவித் தொகை மற்றும் தாலிக்கு தங்கம் வழங்கும் திட்டத்தின் கீழ் 6 பயனாளிகளுக்கும், தலா ரூ.1,01,8000 வீதம் ரூ.1,01,80,000 மதிப்பிலான இணைப்புச் சக்கரம் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர் 100 பயனாளிகளுக்கும், தலா ரூ.15,750 வீதம் ரூ.3,93,750 மதிப்பிலான மடக்கு சக்கர நாற்காலி 25 பயனாளிகளுக்கும், தலா ரூ.3285 வீதம் ரூ.1,64,250 மதிப்பிலான காதுக்கு பின்புறம் அணியும் காதொலி கருவி 50 பயனாளிகளுக்கு என மொத்தம் 175 மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ.1,10,13,000 மதிப்பிலான நலத்திட்ட உதவிகள் இன்று வழங்கப்பட்டது. மேலும், சமூக நலத்துறையின் சார்பில் தலா ரூ.4,785 வீதம் ரூ.6,69,900 மதிப்பில் தையல் இயந்திரம் 140 பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினர்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் எஸ்.உலகநாதன், மாவட்ட சமூக நல அலுவலர் ஆர்.டி.லதா மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

### தஞ்சை வடக்கு மாவட்டம் - கும்பகோணத்தில்

# மாற்றுக் கட்சியினர் 1000 பேர் கழகத்தில் இணைந்தனர்!

## மாவட்டச் செயலாளர் சாக்கோட்டை க.அன்பழகன் எம்.எல்.ஏ. - முன்னாள் அமைச்சர் ஆர்.வைத்தியலிங்கம் முன்னிலையில்

தஞ்சாவூர், மார்ச் 11-

தஞ்சாவூர் வடக்கு மாவட்டம், கும்ப கோணத்தில் மாற்றுக் கட்சியினர் சுமார் 1000 நபர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தில் தங்களை இணைந்து கொண்டனர் .

கும்பகோணம் அடுத்த அண்ணலக்ரஹாரம் ஊராட்சியில் உள்ள சோழன் மஹாலில் கும்பகோணம் மாநகரம் மற்றும் ஒன்றிய பகுதிகளை சேர்ந்த முன்னாள் அமைச்சர் ஆர்.வைத்திலிங்கம் ஆதரவாளர்கள், மாற்றுக் கட்சிகளான எடப்பாடி பழனிச்சாமி அணியினர் மற்றும் பாட்டாளி மக்கள் கட்சியை சேர்ந்த சுமார் ஆயிரம் பேர் பம்பப்படையூர் பால முருகன் ஏற்பாட்டில் தி.மு.க.வில் இணையும் விழா நடைபெற்றது.

இவ்விழாவில் மாவட்டப் பொறுப்பாளர் சாக்கோட்டை க.அன்பழகன் எம்.எல்.ஏ தலைமை வகித்தார். முன்னாள் அமைச்சர் ஆர்.வைத்திலிங்கம், மாநகர செயலாளர் சு.ப.தமிழழகன் ஆகியோர் முன்னிலையில் ஆண்கள் மற்றும் பெண்கள் என மாற்றுக்கட்சியினர் சுமார் 1000 பேர் தங்களை தி.மு.க.வில் இணைத்துக் கொண்டனர். கழகத்தில் இணைந்த அனைவருக்கும் கழக இரு வண்ண துண்டு அணிவித்து வரவேற்றனர்.

இந்நிகழ்ச்சியில் தலைமை பொதுக்குழு உறுப்பினர் அசோக்குமார், மாநகர துணை செயலாளர் பிரியம் சசிதரன், மேற்கு ஒன்றிய நிர்வாகிகள் லோகநாதன், இளங்கோ, கரிகாலன், அன்பழகன், சசிகுமார் மற்றும் கட்சி நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் பங்கேற்று சிறப்பித்தனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### தியாகி தாளமுத்து (நடராஜன்)

**மார்ச் 11 (1939)**



குடந்தையிலிருந்து குமுறும் உணர்ச்சியோடு சென்னை வந்து 13.9.1938 காலை இந்து தியாலாஜிகல் உயர்நிலைப் பள்ளி முன்பு கட்டாய இந்தி ஒழிக! ஆரிய இந்தி ஒழிக! தமிழ் வாழ்க!"என முழக்கமிட்டு மறியலில் கலந்து கொண்டு கைதானார்.

ஜார்ஜ் டவுன் போலீஸ் கோர்ட் நீதிபதி "இப்படியே விட்டுவிட்டால் ஊருக்கு போய்விடுகிறீர்களா ?" என்று கேட்டு மூச்சு இழுப்பதற்குள் விடை வந்தது தாளமுத்துவின் திருவாயிலிருந்து "இல்லை, முடியாது" என்பதாக. "நாலு மாத கடின காவல் தண்டனை விதிக்கிறேன்" என தீர்ப்பளித்தார் நீதிபதி.

சிறையில் கடுமையான வயிற்று போக்கு காரணமாக மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டு அங்கு சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

சிறைச்சாலையில் இறந்துபோன தாளமுத்துவும், நடராஜனும்தான் இந்தி எதிர்ப்பு போரின் முதல் களப்பலிகள்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### ச.த.ராதா

**மார்ச் 11 (2017)**



இளமை காலத்திலேயே கழகக் கொள்கையில் ஈடுபாடு கொண்டு கழகப் பணியாற்றியவர்.

சோளிங்கர் பேரூரில் வட்டச் செயலாளராகவும், பேரூர் செயலாளராகவும் பொறுப்பு வகித்தவர்.

சோளிங்கர் நகர கூட்டுறவு சங்கத் தலைவராக பொறுப்பு வகித்தவர்.

கழகம் அறிவித்த போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**